1990 ஆகஸ்ட் 20] [டாக்டர் மு. கருணாநிதி]

13. சிறுநீரகக் கோளாறுகளினால் அவதிப்படும் ஏழை மக்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் சென்னை பொது மருத்துவ மனைக்கு ரூ. 2.10 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்தத் தொகை தேவையான மருத்துவ இயந்திரங் களை வாங்குவதற்காகவும், சில கட்டிட மாறுதல்களை செய்து முடிப்பதற்காகவும் உபயோகப்படுத்தப்படும். இது கோரிக்கை எண் 18—மருத்துவம் மற்றும் 52—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாட்டிலுள்ள மேற்கு மலைத் தொடர்ப் பகுதி களில் காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டத்தை செயல்படுத்துவதற்காக அரசு ரூ. 2.87 கோடி அனுமதித் துள்ளது. இதற்கென ரூ. 2.15 கோடி எதிர்பாரா நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இது கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

15. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங் களைக் காணலாம். 1990–91 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

11-45 மணி

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990–91—வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1990-91 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 21–8–1990 செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செய லகத்தில் சேர்க்க வேண்டும்.